செய்தி வெளியீடு எண்: 523

# செய்தி வெளியீடு–22.8.2009

## தென்மேற்குப் பருவமழை பொய்த்ததால் காரீப் பருவப் பயிர்களைப் பாதுகாத்திட ஏறத்தாழ 1 இலட்சம் பம்புசெட்டுகளுக்கு 50 சதவீத டீசல் மானியம் 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழகத்தில் தென்மேற்குப் பருவமழை வழக்கமான அளவைவிடக் குறைவாகப் பெய்துள்ளதால் காரிப் பருவத்தில் கடந்த ஆண்டில் 19 இலட்சத்து 28 ஆயிரம் ஹெக்டேரில் மேற்கொள்ளப்பட்ட சாகுபடிப் பரப்பு இந்நிதியாண்டில் 10.8.2009 வரை 7 இலட்சத்து 26 ஆயிரம் ஹெக்டேர் எனக் குறைந்துள்ளது.

காரீப் பருவத்தில் காவிரிப் பாசனப் பகுதியில் 79 ஆயிரத்து 800 ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களைப் பாதுகாக்கவும், சம்பா பருவ சாகுபடியை உரிய காலத்தில் மேற்கொள்ளவும் 28.7.2009 அன்று மேட்டூர் அணை திறக்கப்பட்டுள்ளது.

எனினும், நிலத்தடி நீரை நம்பி பம்பு செட்டுகளைக் கொண்டு சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களைக் காப்பாற்ற 15.7.2009 நிலவரப்படி, 50 சதவீதத்திற்கும் அதிகமாக மழைக் குறைபாடுள்ள அரியலூர், பெரம்பலூர், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கரூர், நாகப்பட்டினம், நாமக்கல், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவாரூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, தூத்துக்குடி, வேலூர், விருதுநகர் ஆகிய 18 மாவட்டங்களில் பயன்படுத்தப்படும் 99 ஆயிரத்து 776 பம்புசெட்டுகளுக்கு 50 சதம் டீசல் மானியமாக ஒரு லிட்டருக்கு 15 ரூபாய் வீதம் அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு 1000 ரூபாய் வரையும், ஒரு விவசாயிக்கு 2 ஹெக்டேர் நிலத்திற்கும் டீசல் மானியம் வழங்கிட 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் கலைஞர் இன்று (22.8.2009) ஆணையிட்டுள்ளார்.

இத்திட்டத்தின்படி, சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் 30.9.2009 வரை விவசாயிகளுக்கு டீசல் மானியம் அனுமதிக்கப்படும்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9